புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

# புறநானூற்றில் பண்பாட்டு விழுமியங்கள்

சை. ஜாபர்
உதவிப் பேராசிரியர்
சி. அப்துல் ஹக்கீம் கல்லூரி (தன்னாட்சி)
மேல்விஷாரம்
இராணிப்பேட்டை மாவட்டம்

*ஆய்வுச்சுருக்கம்*

*சங்க காலத்தில் தமிழகம் மூவேந்தர் ஆட்சியிலும் குறுநில மன்னர்கள் ஆளுகையிலும் இருந்தது. மூவேந்தர்க்கிடையில் அடிக்கடி போர் நிகழ்ந்தது. இங்ஙனம் தமிழ் வேந்தர்களுக்குள் பகையும், பூசலும் இருந்ததே தவிர, பிற நாட்டார் படையெடுப்போ அதனால் மக்கள் அல்லலுறவோ இல்லை. மூவேந்தர்களுக்கிடையில் நிகழ்ந்த போர்கூட அவர்கள் அளவில் நிலவியதே தவிர நாட்டின் அமைதியை சீர்குலைக்கவில்லை. சங்ககால மன்னர்களின் ஆட்சியில் மக்கள் கவலையின்றி வாழ்ந்தனர். மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகமாக வாழ்ந்தனர். சமுதாயத்தில் சாதி மத வேறுபாடின்றி, பசியும் பிணியும் பகையும் நீங்கி, மக்கள் வசியும் வளனும் சிறந்து விளங்கினர். இங்கு அறம், பொருள், இன்பம் இம்மூன்றும் முகிழ்ந்தன. இத்தகைய சிறப்பை உடையது சங்ககாலம் இக்காலத்தில் தான் பாட்டும் தொகையுமான, எட்டுத்தொகை நூல்களும், பத்துப்பாட்டு நூல்களும் தோன்றின. இவற்றில் எட்டுத்தொகை நூல்கள் பல்வேறு காலத்தில் வாழ்ந்த பல்வேறு புலவர்கள் பாடிய பல்வேறு பாடல்களின் தொகுப்பாகும். இவற்றை அகம், புறம், அகப்புறம் என்று மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளனர் இவற்றில் புறம் என்ற பிரிவைச் சார்ந்த புறநானூறு என்ற நூலில் இடம்பெறும் பண்பாட்டுச் சான்றுகளை ஆய்வுக்களங்களாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.*

*முன்னுரை*

*பண்டையத் தமிழர்களின் வாழ்க்கை முறையை விளக்குவது சங்க இலக்கியங்கள் ஆகும். தமிழர்கள் தங்களின் வாழ்வை அகம் புறம் என்று பிரித்தே வாழ்ந்தனர். அக வாழ்க்கை காதல் சார்ந்ததாகவும், புற வாழ்க்கை போர் மற்றும் வீரம் சார்ந்தாகவும் காணப்பட்டது. அக வாழ்க்கையைக் காட்டிலும் புற வாழ்க்கையே தமிழுக்கென்றும், தமிழருக்கென்றும் உள்ள தனித்துவத்தை பறைச்சாற்றி நிற்கிறது. எட்டுத்தொகை நூல்களில் இடம்பெறும் புறநூலான புறநானூறு பண்டையத் தமிழரின் வாழ்க்கையை விளக்கும் பண்பாட்டுக் களஞ்சியமாக காட்சியளிக்கிறது. புறநானூறு என்ற நூலுக்கு தமிழரின் வரலாற்றுக் கருவூலம் என்ற வேறுபெயரும் உண்டு. தமிழ் மன்னர்களின் சீர்சால் ஒழுக்க பண்புகள், மக்களின் வாழ்க்கை முறை, புலவர்களின் இயல்பு நிலை மற்றும் புறநானூறு உணர்த்தும் பாண்பாட்டு கூறுகளைத் தொகுத்துக் காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

*கல்வியின் பெருமை*

*ஒரு மனிதனை மனிதனாக மாற்றுவதே கல்வி ஆகும். மனிதனை மேம்படுத்தவும், அவனை நன்னெறியில் செல்ல வைப்பதற்கும் சிறந்த செல்வமாகத் திகழ்வது கல்விச் செல்வமாகும். 'கல்வியிற் சிறந்த தமிழ்நாடு' எனப் பெயர் பெற்று தமிழகம் அக்காலத்தில் மேம்பட்டு விளங்கியது. ஒரு மாணவனுக்கு சிறந்த பண்புகளை கற்றுத் தருவதில் மிக முக்கிய பங்காற்றுபவர் ஆசிரியர் ஆவார். ஆசிரியர் என்பவர் குற்றங்களை களைபவராகவும், சிறந்த வழிகாட்டியாகவும் திகழ்கிறார். அத்தகைய ஆசிரியருக்குத் துன்பம் நேரும்போது உதவியும்,*

வேண்டிய பொருள் கொடுத்து, வழிபாட்டு நிலையை வெறுக்காது கற்பது நன்று எனக்கூறும் பாண்டியன் ஆரியப்படைக்கடந்த நெடுஞ்செழியன்

"ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நற்பால் உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே"[1] (புறம் - 183)

என்று உலகியலில் கல்வியின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றான். கல்வி உயர்வு தாழ்வினை நீக்குகிறது. அரசனும் கற்றவன் அறிவுரைப்படியே ஒழுகுவான். தன் வயிற்றில் பிறந்த குழந்தைகள் பலரில் கற்றவனையே தாயின் மனம் மிகவும் விரும்பும் என்று கூறும் கல்வியின் சிறப்பை அறிய முடிகிறது.

கடமை உணர்வு

இந்த உலகத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதருக்கும் ஒவ்வொரு கடமை உள்ளது. ஒரு சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் தங்களின் கடமைகளை சரிவரச் செய்தால் இச்சமூகம் சிறப்பாக செயல்படும். இவை சமூகத்திற்க்கு மட்டுமல்லாமல் குடும்பத்திற்கும் மிகச் சிறப்பாக பொருந்தும். ஒரு குடும்பத்தில் உள்ள நபர் தங்களுக்குரிய கடமைகளைத் தெரிந்துக் கொண்டு அவற்றை சிறப்பாக செய்தால் குடும்பத்தில் பிரச்சனை என்பதே இருக்காது. இவ்வகையில் தங்களுக்குரிய கடமைகளை கட்டாயமாக்குவதைக் குறித்து பொன்முடியார் கூறுவது,

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறு வாள்அருஞ் சமம் முருக்கி
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"[2] (புறம் - 312)

ஒரு குடும்பத்தில் தாய் தந்தையர் தங்களுக்குரிய கடமைகளை சரியாகச் செய்தால் அவர்களின் குழந்தை புகழுடன் திகழும். ஒரு நாட்டில் உள்ள அரசன் தன்னுடைய கடமையைச் சரிவரச் செய்து, தன் நாட்டு மக்களை பாதுகாப்பானாயின் அவனுடைய நாடு சீறும் சிறப்பும் பெற்று சிறந்த நாடாக விளங்கும் என்று புறநானூற்றுப் பாடலின் வழி அறிய முடிகிறது.

மனித நேயம்

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற திருமூலரின் வாக்கிற்கிணங்கவும், மனிதர்களிடத்தில் வேறுபாடு கருதுவது குற்றம் என்பதையும் புறநானூறு நமக்கு தெளிவாக விளக்குகிறது. பண்டையத் தமிழரின் பண்பர்டு மிகவும் உயர்ந்தது. உலகமெல்லாம் பாராட்டிப் பின்பற்றக்கூடியது. தமிழ் மக்கள் உலகத்தை ஒன்றென்று கருதினர். உலக மக்கள் அனைவரும் ஒரே குலத்தவராக எண்ணினர். மக்கள் அனைவரும் தம் உடன்பிறந்தவர்களாகவே கருதப்பட்டனர். வேறுபாடு என்பதை அவர்கள் அறியவில்லை. மனிதநேயமே இவ்வுலகிற்கு அவசியம் என்பதை உணர்ந்தனர். ஒற்றுமையே பலம், ஒருமைப்பாடே ஊக்கம் என்பதை கணியன் பூங்குன்றனார்,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
--------------------------------------------
--------------------------------------------
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே"[3] (புறம்.192)

என்று ஒற்றுமையுணர்வையும் மனிதநேயத்தையும், நன்மையும் தீமையும் நமக்கு நம்மால்தான் வருகிறது. நாம் செய்த பிழைகளுக்கு நாம் மற்றவர்களை காரணம் காட்டி குறைக் கூறுவது தவறு

என்பதையும் பறைசாற்றுகிறார். இப்பாடல் தமிழர்களின் தனித்த பண்பாட்டையும், அவர்களின் மனத்திறமையையும் விளக்குவதாக அமைகிறது.

ஈகைப் பண்பு

மனித வாழ்வில் எத்துணை ஒழுக்கங்கள் இருந்தாலும் பொருள் சேர்ப்பதில் மேம்பட்ட ஒழுக்கமும் உண்மையும் இருக்க வேண்டும். உழைத்துப் பெறும் பொருளை இயன்றளவு மற்றவர்களுக்கு கொடுத்து வாழ வேண்டும். 'கொடுப்பதில் இன்பம் பெறுவதில் இல்லை' என்பார்கள் சொற்பமான இந்த உலக வாழ்க்கையில் நம்மால் முடிந்த அளவிற்கு மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதை,

"ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்
ஈனேன் என்றல் அதனினும் இழிந்தன்று
கொள்யெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று"[4] (புறம்.204)

என்று விளக்கமாக எடுத்தியம்புகிறது. பிறரிடம் பொருளைக் கேட்டு வாழ நினைப்பது என்பது இழிவானது தான், அதை விட கேட்பவனுக்கு இல்லை என்போன் இழிவானவன் என்றும், இல்லாதவர்க்கு கொடுத்து உதவுவது என்பது உயர்ந்தது தான், அதை விட உழைக்காமல் பெறும் பொருளை வேண்டாம் என மறுப்பது உயர்வானது என்று கூறுகிறது. இதன்மூலம் சங்ககால மக்களின் ஈகைப்பண்பையும் அவர்களின் உயர்ந்த மனப்பான்மையையும் அறிய முடிகிறது.

பகுத்துண்ணும் பண்பு

பண்டையத் தமிழ் மக்கள் பகுத்துண்ணும் பண்பினைப் பெரியதாகப் பின்பற்றி போற்றினர். 'யாம் பெற்ற இன்பம் பெருக இவ்வையகமே' என்ற திருமூலரின் வாக்கிற்கிணங்க தங்களுடைய வாழ்க்கையை பின்பற்றினார்கள். கிடைத்தற்கரிய அமிழ்தம் கிடைத்தாலும் தான் மட்டும் உண்ணாமல் அனைவரோடும் பகிர்ந்து உண்ண வேண்டும் என்ற மனப்பான்மையைக் கொண்டு வாழ்ந்தனர். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் வேண்டும் என்பதனை

"இந்திரர் அமிழ்தம் இயைவ தாயினும்
இனிதெனத் தமியர் உண்டலும் இலரே"[5] (புறம்.182)

சான்றோர்கள் தேவர்களின் உணவாகிய அமிழ்தமே தமக்கு கிடைத்தாலும் அதை தனியாக உண்ண மாட்டார்கள். மற்றவர்களும் அதை உண்டு மகிழ வேண்டும் என்று கருதி, எல்லோருக்கும் அதை பகிர்ந்துக்கொடுத்தப் பிறகுத்தான் அதை தானும் உண்பார்கள் என்ற கருத்து இடம்பெறுகிறது.

"உண் டாயின் பதம் கொடுத்து
இல் லாயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்"[6] (புறம் - 95)

இப்பாடலில் ஔவையார் அதியமானைப் பற்றி தொண்டைமான் இளந்திரையனிடம் கூறும்போது, உண்டானால் உணவளித்தும், இல்லையானால் உள்ளத்தைப் பகிர்ந்தளித்தும் மகிழும் வறியோர் தலைவன் அதியமான் என்று கூறுகிறாள். இதன்மூலம் அதியமானின் வீரத்தைப் பாராட்டுவதுடன், அவன் எல்லோருக்கும் பகுத்துக்கொடுத்து உண்ணும் இயல்பை உடையவன் என்பதைச் சுட்டுகிறார். மேலும் அதியமானின் உயரிய பண்பையும் ஔவையார் வெளிப்படுத்துகிறார்.

வேளாண் முறை

ஒரு நாட்டில் உள்ள மக்கள் பசியும், பட்டினியும் இல்லாமல் செல்வ செழிப்பாக இருக்க வேண்டுமானால் அந்நாட்டில் நல்ல மழைப் பொழிந்து, நீர் வளம் பெருக்கம் அடைந்து, விவசாயம் வளர்ச்சியடைய வேண்டும். விவசாயம் பெருகும் நாட்டில் உணவிற்கு பஞ்சம் இருக்காது. மக்கள் பசியின்றி நிறைவான வாழ்க்கையை வாழ முடியும். ஒரு மனிதனின் இயல்பான வாழ்க்கையில் நீரும், நிலமும், உணவும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் நாட்டு வளத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ள நீர்வளத்தின் இன்றியமையாமையைத் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு அறிவுறுத்தும் குடபுலவியனார்,

"நீரின்றி அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்தி சினோரே"[7] (புறம் - 18)

என்ற பாடலின் வழி நீரின் முக்கியத்துவத்தை உணர்த்தி, நீர் நிலைகளைப் பெருக்கி நாட்டை வளப்படுத்துவது அரசனின் தலையாயக் கடமை என்றும், நாம் வாழ உணவு கொடுத்தவர்கள் உயிரைக் கொடுத்தவர்களுக்கு ஒப்பாவர் என்றும் நீரையும், நிலத்தையும், ஒரு நாட்டின் முதுகெலும்பாகத் திகழும் வேளாண்மையையும் மேன்மைப்படுத்தி குடபுலவியனார் கூறுகிறார்.

மன்னனின் பெருமை

சங்க காலத்தில் மன்னர்களின் ஆட்சி சிறப்புற்று காணப்பட்டது. மன்னன் தன் நாட்டில் உள்ள மக்களுக்கும், புலவர்களுக்கும் மிகுந்த மதிப்பும் மரியாதையும் வழங்கினான். மன்னன் அவன் என்றும், புவவர் அவர் என்றும் கூறப்பட்டு வந்த காலமாக சங்க காலத்தைக் குறிப்பிடுவர்.

ஒரு நாட்டில் ஆட்சிப் புரியும் மன்னனின் செயலைப் பொருட்டே அந்நாட்டின் வளர்ச்சி அமையும். தன் நாட்டில் ஆட்சிப் புரியும் மன்னனைக் குறித்து புலவர் மோசிகீரனார்,

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால் யான்உயிர் என்பது அறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே"[8] (புறம் - 186)

உயிர் வாழ்வதற்க்கு அடிப்படை ஆதாரங்களாக விளங்குபவை உணவும், நீரும் தான். ஆனால் எங்களுக்கு உணவும், நீரும் முக்கியமல்ல அவை எங்களின் உயிரல்ல. இந்நாட்டை செம்மையாக ஆட்சி செய்து, எங்களை வழிநடத்தும் எம் மன்னனின் உயிரல்லவா எங்களுக்கு முக்கியம். எம் மன்னனின் உயிரே எங்கள் உயிர் என்று, தன் நாட்டை ஆட்சி புரியும் மன்னனின் உயிரைத் தன் உயிருக்கு நிகராக கருதும் அளவிற்கு மன்னனின் ஆட்சி அதிகாரம் சிறப்பாக அமைந்துள்ளது என்பதனை அறிய முடிகிறது.

பாரதப் போரில் சேரலாதன் என்னும் மன்னன் எதிர்த்துப் போரிட்ட பாண்டவர், கௌரவர் ஆகிய இருதிறத்தார்க்கும் சோறிட்டுப் பெருஞ்சோற்றுதியன் ஆன செய்தியை,

"அலங்குளை புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைத் கொண்ட பொலம் பூந்தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது"[9] (புறம் - 02)

என்று முரஞ்சியூர் முடிநாகராயர் கூறுகிறார். இதன்மூலம் மன்னனின் பெருந்தன்மையும், விருந்தோம்பலின் வல்லமையையும் அறிய முடிகிறது.

சங்க காலத்தில் மன்னர்கள் கடமை தவறாமல் அறநெறியை பின்பற்றினார்கள் என்பதை மருதன் இளநாகனார்,

"அறநெறி முதற்றே அரசின் கொற்றம்
அதனால் நமரெனக் கோல்கோடாது
பிறர்யெனக் குணங் கொல்லாது"[10] (புறம் - 55)

இவ்வடிகள் மூலம் மன்னன் என்பவன் தம்மவர், அயலவர் என்ற வேறுபாடு கருதாமல், நடுவுநிலைமை மாறாமல் தன்னுடைய நாட்டில் எல்லோருக்கும் சமமான நீதியை வழங்கி, சிறப்பாக ஆட்சிப் புரிந்தான் என்ற மன்னனின் இயல்பையும் சிறப்பையும் அறிய முடிகிறது,

செல்வத்துப் பயனே ஈதல்

செல்வம் என்பது சிந்தையின் நிறைவாகும். பிறருக்கு கொடுத்து மகிழும் வாழ்வே சிறப்புடையது. செல்வம் என்பது ஓரிடத்தில் நிலையாக நில்லாமல் வண்டியின் சக்கரத்தைப் போல சுழன்றுக் கொண்டே இருக்கும் தன்மை உடையது என்கிறது நாலடியார். செல்வத்தை சேர்த்து வைத்து என்ன பயன்? அதை மற்றவர்களுக்கு வழங்கி உதவ வேண்டும் என்பதை,

"உண்பது நாழி உடுப்பவை இரண்டே

*பிறவும் எல்லாம் ஓர் ஒக்கும்மே*
*செல்வத்துப் பயனே ஈதல்*
*துய்ப்போம் எனினே துப்புக பலவே''*[11] *(புறம் - 189)*

*நம் வாழ்க்கையின் குறிக்கோளே மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்று நக்கீரர் பொதுவாகக் குறிப்பிடுகிறார். அறவழியில் பொருளீட்டித் தானும் இன்புற்றுப் பிறர்க்கும் கொடுத்து, அவர்களையும் இன்புற்று வாழ வழிவகைச் செய்வதன் மூலம் சங்ககாலத் தமிழர்களின் வாழ்க்கை நிலைகள் மேம்பட்ட தன்மைகளாக விளங்கியமை புலனாகிறது.*

*ஒற்றுமை உணர்வு*

*'ஒற்றுமையாக இருப்பதே பலம்' என்பதைப் புலவர் இருவேறு அரசர்கள் ஒரு சேர இருந்தமையை நோக்கி இந்த ஒற்றுமை நீடிக்க வேண்டும் என்பதை,*

*''இருவீரும்*
*உடன்நிலை திரியீர் ஆயின் இமிழ்திரைப்*
*பௌவம் உறுத்தஇப் பயம்கெழு மாநிலம்*
*கையகப் படுவது பொய் ஆகாதே''*[12] *(புறம் - 58)*

*என்ற பாடல் வழி அறியலாம். தமிழக மூவேந்தர்கள் ஒருவருக்கொருவர் பகைக்கொண்டு போரிட்டால் வேற்றுப்புலத்து அரசர்களுக்குத் தமிழகம் ஆளும் இடமாகும் என்பதும், ஒற்றுமையினால் உலகம் வசப்படும் என்பதும் புலனாகின்றது. இதன்மூலம் 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கிடின் அனைவருக்கும் தாழ்வு' என்ற பாரதியின் வரிகள் நினைவிற்கு வருகிறது.*

*உலக இயல்பு*

*உலகத்தில் மானிடராகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் உலக வாழ்க்கை என்பது நிலையில்லாதது. மனிதன் நீண்ட நாட்கள் வாழ இயலாது. அவர்கள் செய்த நல்லறங்கள் மட்டுமே இவ்வுலகில் நிலைக்கும் என்பதனை,*

*''மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்*
*தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே''*[13] *(புறம் - 165)*

*என்ற பெருந்தலைச் சாத்தனாரின் வரிகள் உணர்த்துகிறது.*

*ஒவ்வொருவரும் தன்னைப் போலவே மற்றவர்களையும் கருத வேண்டும். நம்மால் முடிந்த அளவிற்கு, நல்ல செயல்களை மட்டுமே செய்ய வேண்டும். தீமையை அறவே நீக்க வேண்டும் என்பதையும், ஒருவருக்கு நன்மை செய்ய இயலவில்லையெனினும் தீமை செய்யாமல் இருக்க வேண்டும் என்பதை,*

*''நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்*
*அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்*
*எல்லாரும் உவப்பது அன்றியும்*
*நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே''*[14] *(புறம் - 195)*

*இதனை பேச்சு வழக்கில் உதவி செய்யவில்லை எனினும் உபத்திரம் செய்யக்கூடாது என்பர். இவ்வாறு வாழ்ந்தால் நம்மை யாவரும் புகழ்வதற்கும், நம்மை நல்வழியிலேயே செலுத்துவதற்கு ஏற்ற வழியாகும் என்பதை அறிய முடிகிறது.*

*நாம் இன்று ஒருவருக்குச் செய்யும் நன்மையும், தீமையும் நாளை நம்மையே வந்துச் சேரும் என்பதனை,*

*''இம்மை செய்தது மறுமைக்கு ஆம்எனும்''*[15] *(புறம் - 134)*

*எனும் வரிகள் மூலம் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் உணர்த்துகிறார்.*

*ஒவ்வொரு மனிதர்களின் நன்மையிலும் தீமையிலும் உற்றார் உறவினர்கள் மிகவும் அவசியம். உறவினர்களை நாம் எப்போதும் மரியாதையுடன் நடத்தி அவர்களுடன் நட்புக்கொள்வதன் முக்கியத்துவத்தை,*

*''பாஅல் புளிப்பினும் பகல் இருளினும்*
*நாஅல் வேத நெறி திரியினும்*
*திரியாச் சுற்றமொடு முழுதுகேண் விளக்கி''*[16] *(புறம் - 2)*

இவ்வடிகள் பால் புளித்தாலும், பகல் இருளினாலும், நான்கு வேதங்களின் நெறிமுறை மாறினாலும் திரிபில்லாச் சுற்றத்தாருடன் வாழ வேண்டும் என்று சுற்றத்தாரின் உறவுகளை மேம்படுத்தி உரைக்கிறது.

விருந்தோம்பல் பண்பு

தமிழரின் வரலாற்றுக் கருவூலம் என்று அழைக்கப்படும் புறநானூறு கல்வி, பொதுமைப் பண்புகள், கடமைகள் போன்ற பாண்பாட்டு விழுமியங்களுடன் விருந்தோம்பலையும் வலியுறுத்துகிறது. கணவர் இருந்தால் பாணர் தம் வறுமைத்துயர் நீங்கும் அளவுக்கு வாரி வழங்குவான். பாடினிக்கு அணிய பொன்னரி மாலையினையும், சூட்டிக்கொள்ள போற்றா மரையும் வழங்கி மகிழ்வான், அவன் இல்லாத நேரத்தில் வந்தவர்க்கு இல்லை என்று சொல்லியனுப்ப மனமில்லை இல்லாளுக்கு, பாணரே ஊற்று நீர் தூய்மையாக சாடியிலே உள்ளது. முற்றத்தில் புறா, காடை போன்ற பறவைகளும், உண்பதற்காகச் சமைத்த திணைச்சோறு இருக்கிறது என் செய்வேன்? சுட்ட முயல் இறைச்சி உள்ளது அதையாவது தருகிறேன் இங்கு இருந்து உண்டு செல்வீராக என்று இல்லத்தரசி அன்போடு அழைப்பதை,

"முயல் சுட்டவாயினும் தருவோம் புகுந்து
ஈங்கு இருந்தீமோ முதுவாய்ப் பாண"[17] (புறம் - 319)

என்று ஆலங்குடிவங்கனார் எனும் புலவர் பாடுவதன் மூலம் விருந்தோம்பலைப் பற்றி அழகாக உணர முடிகிறது.

முடிவுரை

எட்டுத்தொகை நூல்களில் புறநானூறு பண்டையத் தமிழரின் வாழ்வியல் பண்பாட்டை செம்மையுற விளக்கும் கலங்கரை விளக்கமாகும். மறத்தில் அறமும், வேளாண் முறை குறித்த சிந்தனையும், பகுத்துண்ணும் பண்பு நலனும், ஒற்றுமை உணர்வும், மனித சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வுகளை நீக்கும் கல்வியின் பெருமையையும், இந்த உலகத்தின் இயல்பான தன்மைகளையும், நாட்டை சிறப்புற செம்மையாக ஆட்சிச் செய்யும் மன்னனின் பெருமையும், இரப்பவர்களுக்கு இல்லை என்று கூறாத ஈகைப் பண்பும், தனிமனிதனுக்குரிய கடமைகளையும், மக்களை உபசரிக்கும் விருந்தோம்பல் பண்பையும், அனைவரையும் ஒன்றாக எண்ணும் மனிதநேயமும் பண்டையத் தமிழரிடையே நிலவியமை புலனாகின்றது. இன்றைய நாகரிக உலகில் சிலர் பண்பாட்டை மறந்தும், இழந்தும் வரும் வேளையில் அவற்றை நினைவுக் கூர்வது சாலப் பொருந்தும். ஓட்டுமொத்தமாக புறநானூறு சங்கத்தமிழர்களின் வீரவாழ்க்கையினையும், பண்பாட்டுக் கூறுகளையும் எடுத்தியம்பும் வரலாற்றுக் கருவூலமாகத் திகழ்கின்றது என்பதனை உணரமுடிகின்றது.

சான்றெண் விளக்கம்

1. புறம் - 183
2. புறம் - 312
3. புறம் - 192
4. புறம் - 204
5. புறம் – 182
6. புறம் - 95
7. புறம் - 18
8. புறம் - 186
9. புறம் - 02
10. புறம் - 55
11. புறம் - 189
12. புறம் - 58
13. புறம் - 165
14. புறம் - 195
15. புறம் - 134
16. புறம் - 02

17. புறம் - 319

துணை நின்ற நூல் ஆதாரங்கள்:


1. புறநானூறு மூலமும் உரையும் - ஔவை துரைசாமிப்பிள்ளை.
2. புண்பாட்டு மானுடவியல் - பக்தவத்சல பாரதி.
3. தமிழர் நாகரிகமும் பண்பாடும் - அ. தட்சிணாமூர்த்தி.
4. சங்ககால வாழ்வியல் - ந. சுப்பிரமணியன்


********* ********* ********** ********* ********* ********** ********** **********